**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC.127/2017**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தமயந்தி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Dr. ரம்யா ராஜதுரை | தொழில் | :மருத்துவர் |
| கணவர் பெயர் | : ராஜா | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 32 |

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது .)**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்பொழுது செஞ்சி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.08.2015ம் தேதியன்று செஞ்சி அரசு பொது மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது காலை 11.45 மணிக்கு திரு.முனுசாமி வயது (25) த/பெ முத்துமணிதேவர் என்பவரை செந்தில் என்பவர் அழைத்து வந்து சிகிச்சையில் சேர்த்தார். இருசக்கர வாகனத்தில் சென்றபோது டிராக்டர் இடித்ததால் காயம் அடைந்ததாக சொன்னார். 21.08.2015ம் தேதி சுமார் காலை 11.10 மணி அளவில் டிராக்டிர் மோதியதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு

1. வலது கால் தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.
2. வலது கால் முட்டிக்கு கீழே 2 எலும்புகளிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.
3. காயம்பட்டவரை பரிசோதித்தபோது சுயநினைவு இல்லாமல் இருந்தார்.

மேற்படி காயம்பட்ட முனுசாமிக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு போக சொன்னோம். காயம்பட்டவர்கள் மதுரை வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்கள். அங்கு காயம்பட்டவருக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளார்கள். அங்கு எடுத்து கொண்ட சிகிச்சையை பரிசீலித்து காயம்பட்ட முனுசாமிக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று காயச்சான்று வழங்கினேன்.

2. கடந்த 21.08.2015 ம் தேதியன்று செஞ்சி அரசு பொது மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது காலை 11.45 மணிக்கு திரு.சுப்பிரமணி வயது (42) த/பெ ஆறுமுகம் என்பவரை வெங்கடேஷ் என்பவர் அழைத்து வந்து சிகிச்சையில் சேர்த்தார். இருசக்கர வாகனத்தில் சென்றபோது டிராக்டர் இடித்ததால் காயம் அடைந்ததாக சொன்னார். அன்றைய தினம் மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பாக அரை மணி நேரம் முன்பு டிராக்டிர் மோதியதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு

1. இடது கால் முட்டியில் எலும்பு முறிவு இருப்பதாக தெரிந்தது.

மேற்படி காயம்பட்ட சுப்பிரமணிக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு போக சொன்னோம். ஜிப்மர் மருத்துவமனையில் காயம்பட்டவருக்கு இடது கால் முட்டியின் கீழ் உள்ள எலும்பில் எலும்பு முறிவு இருப்பதாக கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளித்தனர். அங்கு எடுத்து கொண்ட சிகிச்சையை பரிசீலித்து காயம்பட்ட சுப்பிரமணிக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று காயச்சான்று வழங்கினேன்.

**(2.03.10.2015 தேதியிட்ட முனுசாமி பெயரில் உள்ள விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2**
**3.12.10.2015 தேதியிட்ட சுப்பிரமணி பெயரில் உள்ள விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

## குறுக்குவிசாரணை:

**4.** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் ஏதாவது வாங்கினாரா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.